தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கூடுதல் லாபம் பெற புதினா சாகுபடி**

First Published : 12 Jun 2011 01:21:13 PM IST

காரியாபட்டி, ஜூன் 11: அதிக லாபம் பெற புதினா சாகுபடி செய்யலாம் என விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

தமிழக சமையலில் புதினாவிற்கு முக்கிய இடம் உண்டு. மருத்துவ குணங்கள் கொண்ட புதினா உடல் ஆரோக்கியத்துக்கு சிறந்தது. மதுரை, திண்டுக்கல், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, பூந்தமல்லி உள்ளிட்ட பகுதிகளில் உணவுக்குத் தேவையான புதினா பயிரிடப்படுகிறது.

புதினாவை வணிக நோக்கில் பயிரிட்டால் நல்ல லாபம் கிடைக்கும். மித வெப்பப் பகுதிகளில் வடிகால் வசதியுள்ள இருபொறை மண், காரத்தன்மை கொண்ட நிலங்களில் புதினா நன்கு வளரும்.

நிலத்தை நன்கு பண்படுத்தி ஹெக்டேருக்கு 10 டன் மக்கிய தொழுஉரம் இட்டால் போதுமானது. புதினா செடிகள் பெரும்பாலும் பூச்சித்தாக்குதலுக்கு உள்ளாவது இல்லை. அவ்வப்போது சாதாரணமாக களை எடுத்தால் போதுமானது.

ஜூன், ஜூலை மாதங்கள் நடவுக்கு ஏற்ற காலம். உணவுக்கான புதினா நடவு செய்த 5-வது மாதத்தில் இருந்து, 3 மாதங்களுக்கு ஒருமுறை அறுவடை செய்யலாம். ஒருமுறை நட்ட செடிகள் 4 ஆண்டுகள் வரை பலன் தரும்.

ஹெக்டேருக்கு ஆண்டுக்கு 48 ஆயிரம் கிலோ இலைகள் கிடைக்கும். எண்ணெய் தயாரிப்புக்கான புதினாவில் இருந்து ஆவி வடித்தல் முறையில் 150 முதல் 250 கிலோ வரை எண்ணெய் தயாரிக்கலாம்.

புதினா எண்ணெய் சர்வதேச சந்தையில் கிலோ ரூ.ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது. எண்ணெய்க்கான புதினா 90 நாளில் அறுவடைக்கு வரும்.

வாழை, கரும்பு, சவுக்கு உள்ளிட்ட பயிர்களில் ஊடு பயிராகவும் புதினா பயிரிடலாம். 90 நாளில் ஒரு ஹெக்டேரில் ரூ.30 ஆயிரம் லாபம் கிடைக்கும்.

இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

**நெல்லிக்காய் மிட்டாய் தயாரிக்கும் பயிற்சி:**

First Published : 12 Jun 2011 12:32:32 PM IST

கோவை, ஜூன் 11: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் "நெல்லிக்காயில் இருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பு' குறித்த பயிற்சி ஜூன் 15 மற்றும் 16 ஆகிய இரு நாள்கள் நடைபெற உள்ளது.

நெல்லி கலவை பானங்கள், சர்க்கரைப்பாகு, மிட்டாய் மற்றும் துருவல், தயாரித்த பொருள்களை சுகாதார முறையில் அடைத்தல், தொழில் தொடங்குவதற்கான உரிமம், பொருள்களை விற்பனை செய்வதற்கான வங்கி கடன் வசதி பெறுதல் பற்றி விற்பனை செய்யும் உத்திகள் உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சி வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,000 செலுத்தி தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். நேரில் வந்து பெயரைப் பதிவு செய்து கொள்ள இயலாதவர்கள் பயிற்சி கட்டணத் தொகையை வரைவோலை மூலம் முதன்மையர், பொறியியல் கல்லூரி என்ற பெயரில், கோவையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் பெறத்தக்க வகையில் எடுத்து, பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-641003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

பதிவு செய்து கொள்ள இறுதி நாள் ஜூன் 14. மேலும் விவரங்களுக்கு, 0422-6611340, 6611268.

**17-ல் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்**

First Published : 12 Jun 2011 11:52:44 AM IST

கடலூர், ஜூன் 11: கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்கும் கூட்டம் வரும் 17-ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று ஆட்சியர் வே.அமுதவல்லி சனிக்கிழமை அறிவித்தார்.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் அன்று காலை 10-30 மணிக்கு ஆட்சியர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

கடலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது வேளாண் சார்ந்த குறைகளை கோரிக்கைகளை தெரிவிக்க அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும். எழுத்துபூர்வமாக மனுக்கள் மூலமாகவும் கோரிக்கைகளைத் தெரிவிக்கலாம்.

கூட்டத்தில் தெரிவிக்கும் குறைகளுக்கு உரிய துறையின் உயர் அலுவலர்கள் பதில் அளிக்கவும், தொடர் நடவடிக்கைகள் எடுக்கவும் மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் செய்திக்குறிப்பு

தெரிவிக்கிறது.

**கால்நடை மருத்துவ முகாம்**

First Published : 12 Jun 2011 11:50:08 AM IST

கடலூர், ஜூன் 11: கடலூர் அருகே ராமாபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவ முகாம் வெள்ளிக்கிழமை நடந்தது.

÷தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தில் இந்த முகாம் நடத்தப்பட்டது. முகாமில் ராமாபுரம், எஸ்.புதூர், வி.சாத்தங்குப்பம், வி.காட்டுப்பாளையம், குறவன்பாளையம் கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு, செயற்கை கருவூட்டல், தடுப்பு ஊசி, குடற்புழு நீக்கம், மலட்டுத்தன்மை நீக்கம், சினைப் பரிசோதனை ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

÷முகாம் தொடக்க விழாவுக்கு, ராமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் ஞானசேகரன் தலைமை வகித்தார். கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் நடராஜன் தொடங்கி வைத்தார்.

÷ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சாந்தி பஞ்சமூர்த்தி வாழ்த்திப் பேசினார். கால்நடைத் துறை உதவி இயக்குநர் ராமசாமி, கால்நடை உதவி மருத்துவர்கள் மோகன், கமலக்கண்ணன், முருகன், பார்கவி, கால்நடை ஆய்வாளர் ராஜமச்சேந்தசிரச் சோழன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வேளாண்மை கணக்கெடுப்பு குறித்த மண்டல பயிற்சி முகாம்**

First Published : 12 Jun 2011 02:51:31 PM IST

திருவண்ணாமலை, ஜூன் 11: புள்ளியியல் துறை சார்பில் 9-வது வேளாண்மை கணக்கெடுப்பு குறித்த மண்டல அளவிலான பயிற்சி முகாம் திருவண்ணாமலையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசிய அளவில் வேளாண்மை கணக்கெடுப்பு நடக்கிறது. அதன்படி 9-வது வேளாண்மை கணக்கெடுப்பு (2010-11) வரும் ஜூலை 1-ம் தேதி தொடங்கி 30.6.2012 வரை, தொடர்ந்து மூன்று கட்டங்களாக நடக்கிறது.

அதையொட்டி சென்னை மண்டலத்துக்குட்பட்ட திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், தஞ்சை, நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய 9 மாவட்டங்களைச் சேர்ந்த புள்ளியியல் துறை அதிகாரிகளுக்கான சிறப்பு முகாம் திருவண்ணாமலையில் நடைபெற்றது.

புள்ளியியல் துறை இணை இயக்குநர் ஆர்.நவநீதம் தலைமை தாங்கி பேசியது:

வேளாண்மை கணக்கெடுப்பு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் வளர்ச்சித் திட்ட பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. நில வகைப்பாடுகள், பயிர் சாகுபடி முறைகள், விவசாயக் கடன் வாய்ப்புகள், விவசாயத்துக்கு பயன்படும் கால்நடைகள்,

இயந்திரங்கள் மற்றும் இடுபொருள்கள், நீர்ப்பாசன வசதிகள் போன்றவை குறித்து விரிவாக கணக்கெடுப்பு நடத்தப்படும்.

வருவாய் துறையினருடன் இணைந்து இப்பணி மேற்கொள்ளப்படும். வருவாய் துறையில் பதிவாகும் அடங்கல் உள்ளிட்ட பதிவேடுகள் அடிப்படையில் முதற்கட்ட புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படும். பின்னர் கள ஆய்வு மூலம் கூடுதல் விவரங்கள் சேகரிக்கப்படும். மேலும் நில உபயோகம், நீர்ப்பாசனம், நீர்ப் பாசன ஆதாரம், நீர் பாய்ச்சப்பட்ட, பாய்ச்சப்படாத பரப்பு விவரங்கள், அறியப்படும் என்றார் நவநீதம்.

சென்னை மண்டல இணை இயக்குநர் கே.ரவிக்குமார், தலைமையிட புள்ளியியல் அலுவலர் சாந்தி, மாவட்ட புள்ளியியல் உதவி இயக்குநர் க.பாலசுப்பிரமணியன் உள்பட பலர் கலந்துகொண்டனர். செய்யாறு கோட்ட புள்ளியியல் அலுவலர் கே.ரவி நன்றி கூறினார்.

**அதிக விலைக்கு உரம் விற்றால் கடும் நடவடிக்கை'**

First Published : 12 Jun 2011 02:51:44 PM IST

செய்யாறு, ஜூன் 11: உரக்கடைகளில் அதிக விலைக்கு உரங்கள் விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி எச்சரித்தார்.

செய்யாறு பகுதியைச் சேர்ந்த உர வியாபாரிகள் கூட்டம் செய்யாறு வேளாண்மை அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தலைமை வகித்துப் பேசியது:

உரிமம் பெற்ற நிறுவனங்களின் உரம், பூச்சி மருந்துகளை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். தடை செய்யப்பட்ட பூச்சி மருந்துகளை விற்பனை செய்யக் கூடாது. விற்கும் பொருள்களுக்கு கட்டாயம் பில் தரவேண்டும். விலை விவரங்களை தகவல் பலகையில் எழுதிவைக்க வேண்டும்.

டிஏபி போன்ற உரங்களை அதிக விலைக்கு விற்றால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வேளாண் துறை அலுவலர்களின் பரிந்துரையின் பேரில் தேவையின் அடிப்படையில் பூச்சிமருந்து வழங்க வேண்டும் என்றார்.

கூட்டத்தில் உர வியாபாரிகள் டி.பி.வேலு, ஆர்.நடராஜன், சுதர்சன், பி.ஆர்.எல்.குருமூர்த்தி, கிருஷ்ணன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**வேளாண் உதவி மையம் சார்பில் மும்முனை முன்பருவ முகாம்**

First Published : 12 Jun 2011 02:32:14 PM IST

திருவெறும்பூர்,ஜுன் 11: திருச்சி மாவட்டம், துவாக்குடி அருகேயுள்ள தேனீர்பட்டி கிராமத்தில் திருவெறும்பூர் வட்டார வேளாண் உதவி மையம் சார்பில் மும்முனை முன்பருவ முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

திருவெறும்பூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் இரா. ரவி தலைமை வகித்து ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் குறித்தும், வேளாண் துணை இயக்குநர் சபாநடேசன் முன்னிலை வகித்து, சம்பா சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி முறை குறித்தும், அரசு மானியத் திட்டங்கள் குறித்தும் விளக்கினர்.

விவசாயிகள் சம்பா சாகுபடிக்கு முன் கோடை உழவு செய்வதால், மண்ணிலுள்ள புழுக்களின் முட்டைக் குவியல்கள், கூண்டுப் புழுக்கள், களைச் செடிகள் அழிக்கப்படுவது குறித்து வேளாண் உதவி அலுவலர் இசபெல்லா எடுத்துரைத்தார்.

மண்ணின் தன்மை பற்றி அறியவும், சம்பா பருவத்தில் விவசாயிகள் வயலின் வளத்தைப் பொறுத்து எவ்வாறு உரங்களை இடலாம் என்பதையும் அறிய, மண் மாதிரிகள் எடுப்பதன் அவசியத்தை உதவி அலுவலர் சரவணனும், சம்பா சாகுபடியில் வரக்கூடிய நோய்கள் குறித்து உதவி அலுவலர் திருக்குமரனும் விளக்கினர்.

உதவி அலுவலர் அமல்ராஜ் நன்றி கூறினார்.

**வேளாண் பல்கலை. பேராசிரியருக்கு "சிக்ஷா ரத்தன்' விருது**

First Published : 12 Jun 2011 12:20:44 PM IST

கோவை, ஜூன் 11: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உழவியல் துறை பேராசிரியர் பிரேம்சேகருக்கு, தேசிய அளவிலான "சிக்ஷா ரத்தன்' விருது கிடைத்துள்ளது. வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் மேற்கொண்ட சிறந்த பணிக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் உள்ள இந்திய இன்டர்நேஷனல் பிரண்ட்ஷிப் சொசைட்டியின் சார்பில் சிக்ஷா ரத்தன் விருதை, அருணாசலபிரதேச மாநில ஆளுநர் ஜே.ஜே.சிங் வழங்கினார்.

நெல், மக்காசோளம், சூரியகாந்தி, உளுந்து, பருத்தி மற்றும் காய்கறிகளில் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 10-க்கும் மேற்பட்ட நவீன தொழில்நுட்பங்களை கண்டுபிடித்துள்ளார்.

அதேபோல 2003 முதல் 2005 வரையில் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவராகப் பணியாற்றியபோது, செம்மை நெல் சாகுபடி என்ற நவீன தொழில்நுட்பத்தை திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளிடம் பிரபலப்படுத்தியுள்ளார்.

பன்னாட்டு மற்றும் தேசிய ஆராய்ச்சி பத்திரிகைகளில் பல்வேறு ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

நான்கு தொழில்நுட்ப புத்தகங்களை எழுதியுள்ளார். இவர் தமிழில் எழுதிய "ஒருங்கிணைந்த உர வேளாண்மை' புத்தகத்திற்கு, மெட்ராஸ்
வேளாண்மை மாணவர்கள் சங்கத்தின் 2002-ம் ஆண்டிற்கான விருது கிடைத்துள்ளது.

**விவசாய சங்கம் தொடக்கம்**

First Published : 12 Jun 2011 02:03:21 PM IST

அரியலூர், ஜூன் 11: அரியலூர் மாவட்டம், திருமானூர் அருகிலுள்ள கோவிலூரில் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவுக்கு தசாவதரன் தலைமை வகித்தார். கமலக்கண்ணன் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு விவசாய சங்க மாநிலத் துணைச் செயலர் த. இந்திரஜித், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று விவசாய சங்கத்தைத் தொடக்கி வைத்துப் பேசினார்.

விழாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் ஏ. வேணுகோபால், தமிழ்நாடு விவசாய சங்க மாவட்டச் செயலர் ஆர். உலகநாதன், ஏஐடியுசி மாவட்டச் செயலர் டி. தண்டபாணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலர் ஆறுமுகம், துணைச் செயலர் பன்னீர்செல்வம், பொருளாளர் கலியபெருமாள் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

**"ஆண்டுக்கு ஒரு முறை மண் பரிசோதனை அவசியம்'**

First Published : 12 Jun 2011 01:45:41 PM IST

கரூர், ஜூன் 11: ஆண்டுக்கு ஒரு முறை மண் பரிசோதனை அவசியம் என்றார் தாந்தோன்றிமலை வேளாண் உதவி இயக்குநர் (பொ) க. கவிதா.

தாந்தோன்றிமலை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தின் சார்பில் ஐம்பெரும் முனைப்பு இயக்கம் தம்மநாயக்கன்பட்டியில் அண்மையில் நடைபெற்றது. மூக்கணாங்குறிச்சி ஊராட்சித் தலைவர் பி. சிவசாமி தலைமை வகித்தார். மண் பரிசோதனை மற்றும் பயன்பாடுகள் குறித்து வேளாண் உதவி இயக்குநர் (பொ) க. கவிதா பேசியது:

மண்ணின் வளத்தைக் கண்டறிய மண் பரிசோதனை அவசியமான ஒன்றாகும். மண் பரிசோதனைக்கு மண் மாதிரிகளை தகுந்த முறையில் எடுக்க வேண்டும். மண் மாதிரிகள் தவறாக எடுக்கப்பட்டால் மண் வளமும் தவறாக பிரதிபலிக்கப்படும்.

மண் மாதிரிகள் சேகரிக்கும் போது வயலின் வரப்பு ஓரங்கள், நிழல் படரும் இடங்கள், எரு குவித்த இடங்கள் ஆகியவற்றை தவிர்த்து எடுக்க வேண்டும்.

மேட்டுப்பாங்கான இடங்கள் இருந்தால் தனியாகவும், தாழ்வான பகுதிகளில் தனியாகவும், மண் மாதிரிகளை சேகரிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 10 முதல் 15 மாதிரிகள் எடுக்க வேண்டும்.

மண் பரிசோதனை மூலம் மண் வளத்தை அறிந்து அதற்கேற்ப நிலத்தையும் பயிர்களையும் மேலாண்மை செய்ய வேண்டும் என்றார்.

தொடர்ந்து மண் பரிசோதனை மற்றும் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கத்துடன் கூடிய பயிற்சியும், உயிர் உரங்கள் பயன்பாடு மற்றும் உயிர் காரணிகள் பயன்பாடு குறித்தும் வேளாண் அலுவலர்கள் விளக்கினர்.

**உர விற்பனையாளர்கள் ஆலோசனைக் கூட்டம்**

First Published : 12 Jun 2011 02:06:39 PM IST

இலுப்பூர், ஜூன் 11: இலுப்பூர் அருகேயுள்ள அன்னவாசல் வேளாண்மை விரிவாக்க மையத்தில் உர விற்பனையாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) சர்புதீன் பேசியது:

கூடுதல் விலைக்கு உரங்களை விற்கும் விற்பனையாளர்களின் உரிமம் ரத்து செய்யப்படும். உரங்களை தேவையான அளவுக்கு மட்டுமே இருப்புவைத்து விற்பனை செய்ய வேண்டும்.

மேலும், பூச்சி மருந்து விற்பனை உரிமம் பெறவும், உரிமத்தைப் புதுப்பித்தல் குறித்த வழிமுறைகளையும் அனைவரும் தெரிந்து கொண்டு உரிய காலத்துக்குள் விண்ணப்பிக்க வேண்டும். விவசாயிகளுக்கு தரமான உரங்களை தட்டுபாடு இன்றி வழங்க வேண்டும் என்றார்.

வேளாண்மை அலுவலர் (தரக் கட்டுப்பாடு) ராஜசேகரன், அன்னவாசல் வேளாண் துறை அலுவலர்கள் அன்பரசன், சுமித்ராதேவி, விராலிமலை வேளாண் அலுவலர் பழனியப்பன் ஆகியோர் பேசினர். கூட்ட ஏற்பாடுகளை குன்றாண்டார்கோவில் வேளாண் அலுவலர் மதியழகன் குழுவினர் செய்திருந்தனர்.

இலுப்பூர், மலைக்குடிப்பட்டி, விராலிமலை, கொடும்பாளூர், பரம்பூர், வயலோகம், கீரனூர், ஒடுகம்பட்டி, அன்னவாசல், விராலிமலை, குன்றாண்டார்கோவில் பகுதிகளைச் சேர்ந்த உர விற்பனையாளர்கள் பங்கேற்றனர்.

**ஆலங்குடி பகுதியில் கடலை விதைப்பு தீவிரம்**

First Published : 12 Jun 2011 02:06:15 PM IST

ஆலங்குடி, ஜூன் 11: ஆலங்குடி பகுதியில் கடலை விதைப்பு தீவிரமாக நடைபெறுகிறது.

ஆலங்குடி பகுதி கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு கடலை சாகுபடியில் பிரசித்தி பெற்று விளங்கியது. இங்கு சுமார் 100 கடலை அரைவை ஆலைகள் இயங்கிவந்தன.

சுமார் 2000 தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெற்று வந்தனர். இங்கிருந்து வெளிநாடுகளுக்கு கடலை பருப்பு ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஆனால், கடலை சாகுபடியில் போதிய வருவாய் கிடைக்கவில்லை எனக் கருதிய விவசாயிகள், ஆழ்குழாய்க் கிணற்றுப் பாசனம் மூலம் வாழை, சோளம், கரும்பு உள்ளிட்ட மாற்றுப் பயிர்கள் மீது ஆர்வம் காட்டத் தொடங்கினர்.

இதனால், கடலை சாகுபடி பெருமளவில் குறைந்து, பாதிக்கும் அதிகமான கடலை அரைவை ஆலைகள் மூடப்பட்டன.

இந்த நிலையில், கடந்த சில ஆண்டுகளாக நிலவும் தொழிலாளர் பற்றாக்குறை, இடுபொருள் விலை உயர்வு, விளைபொருள் விலை குறைவு உள்ளிட்ட பிரச்னைகளுடன், மின் வெட்டு பிரச்னையும் தலைவிரித்து ஆடுவதால் மாற்றுப் பயிர் சாகுபடியும் பெருமளவில் குறைந்துபோயின.

இந்த நிலையில், அண்மையில் பெய்த கோடை மழையைப் பயன்படுத்தி, வெற்று நிலமாக இருந்த விளை நிலங்களில் கடலை சாகுபடியில் இந்தப் பகுதி விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

தென்மேற்குப் பருவ மழை தீவிரமடைந்திருப்பதால் குறைந்த தண்ணீரில் வளரும் தன்மையுடைய கடலை பயிர் சாகுபடியில் ஆர்வம் காட்டுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.


எனவே, கடலை சந்தைக்கு ஆலங்குடி பிரசித்தி பெற்றது என்பது மீண்டும் நிரூபனமாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விதைக் கடலை விற்பனை: கடலை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவதால், விதைக் கடலை விற்பனை களைகட்டியுள்ளது. இந்தப் பட்டத்துக்கு ஆலங்குடியிலிருந்து ஏறத்தாழ 2 லட்சம் விதைக் கடலை மூட்டைகள் விற்பனையாகும் என்று எதிர்பார்ப்பதாக வியாபாரிகள் கூறினர்.

தினமலர்

**ஆசிய நாடுகளில் தேவை அதிகரிப்பு:முந்திரி விலை 40 சதவீதம் உயர்ந்தது**

ஜூன் 13,2011,02:00



கொச்சி:ஆசிய நாடுகளில் முந்திரிக்கான தேவைஅதிகரித்துள்ளது. மேற்கு ஆப்ரிக்க நாடுகளில் இருந்து முந்திரி கொட்டை வரத்து குறைந்துள்ளதால், நடப்பாண்டில், இதன் விலை 30 முதல் 40 சதவீதம் அதிகரித்துள்ளது.சென்ற 2010-11ம் நிதி ஆண்டில், நாட்டில், பருவம் தவறிய மழை, வெப்ப நிலையில் மாற்றம் போன்ற காரணங்களால், முந்திரி உற்பத்தி பெரியளவில்

பாதிக்கப்பட்டது. கடந்த 2009-10ல், 6.13 லட்சம் டன் அளவிற்கும், 2008-09ம் ஆண்டில், 6.95 லட்சம் டன் அளவிற்கும், 2007-08ம் ஆண்டில், 6.6 லட்சம் டன் அளவிற்கும் முந்திரி உற்பத்தியானது.

சென்ற நிதி ஆண்டில், நாட்டில் முந்திரி விளைச்சல் பெரியளவில் பாதிக்கப்பட்டதால், நாட்டுக்கு தேவைப்படும் முந்திரி தேவையில் பாதி அளவிற்கு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.முந்திரி விளைச்சல் அதிகமுள்ள வியட்நாம் நாட்டிலும், பருவம் தவறிய மழையால் பெரியளவில் விளைச்சல் பாதிக்கப்பட்டது. முந்திரி கொட்டை காய்வதில் சிக்கல் ஏற்பட்டு, நல்ல மகசூல் கிடைப்பது பாதிக்கப்பட்டது. இதனால், சென்ற 2010-11ம் ஆண்டின், இரண்டாவது காலாண்டில், முந்திரி கொட்டை அளிப்பில் பாதிப்பு ஏற்பட்டது.உலகில் உற்பத்தி செய்யப்படும் முந்திரியில், 50 சதவீதம் இந்தியா மற்றும் வியட்நாம் நாடுகளில் கிடைக்கிறது.

சென்ற ஆண்டில் உற்பத்தி பாதிக்கப்பட்டதால், விலை அதிகரித்தது. இதனால், முந்திரி வர்த்தகர்கள் முன் கூட்டியே வாங்கி இருப்பு வைக்காமல், தேவைப்படும் போது வாங்கினால் போதும் என்ற அடிப்படையில், கொள்முதலை நிறுத்தி வைத்தனர்.தற்போது ஆசிய நாடுகளில் தேவை அதிகரித்துள்ளதால், சர்வதேச அளவில் முந்திரியின் விலை, கடந்த ஆண்டை விட, தற்போது 30 முதல் 40 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், 'அளிப்புக்கும், தேவைக்கும் இடைவெளி குறைந்து, புதிய சந்தை உருவாகும் வரை, நிலையற்ற தன்மை நீடிக்கும். சில சந்தைகளில் முந்திரி தினப்படியும், சில சந்தைகளில் வார இடைவெளிகளிலும் வாங்கப்படுகிறது. இப்படி வாங்குவதும் விலை அதிகரிப்புக்கு காரணமாகிறது. மூன்றாவது காலாண்டில், பண்டிகைகள் வர இருப்பதால், மேற்கு ஆசிய நாடுகளில் முந்திரிக்கான தேவை மேலும் அதிகரிக்கும்' என முந்திரி வர்த்தகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

**"சிறப்பு விவசாய மண்டலம்' அமைக்க விவசாயிகள் யோசனை**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,02:25 IST

நலிந்து வரும் வேளாண் துறையை வளப்படுத்த, ஒரே பரப்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் உள்ள விவசாயப் பகுதிகளை சிறப்பு விவசாய மண்டலங்களாக அரசு அறிவிக்க வேண்டும் என்று திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் யோசனை தெரிவித்துள்ளனர். திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயம் பிரதானத் தொழிலாக விளங்கிவருகிறது. ஆண்டுக்கு சராசரியாக 11

செ.மீ., (1104.4 எம்.எம்.,) மழையளவு பதிவாகி, ஏரி மற்றும் குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகள் நிரம்பி நிலத்தடி நீர் ஆதாரம் வளமுடன் காணப்படுவதால், நெல், கம்பு, கரும்பு, மணிலா, பயறு வகைகள் தவிர மா, கொய்யா மற்றும் காய்கறிகளையும் பரவலாக பயிர் செய்கின்றனர். சிறு விவசாயிகளில் பலர் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபடுகின்றனர். அதோடு கும்மிடிப்பூண்டி, மீஞ்சூர் போன்ற மாவட்டத்திற்கு உட்பட்ட 80 கி.மீ., கடலோரப் பகுதிகளில் மீன், இறால் வளர்ப்புத் தொழிலிலும் ஏராளமானோர் ஈடுபட்டு வருகின்றனர். ஆக, மாவட்டத்தில் 47 சதவீதம் மக்கள் விவசாயம் மற்றும் அதை சார்ந்த தொழில்களை மட்டுமே நம்பியுள்ளனர். திருவள்ளூர் மாவட்டம், சென்னையை ஒட்டி அமைந்துள்ளதால் விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதும் எளிதாகிறது. குக்கிராமங்களில் இருந்தும் ரயில் மற்றும் சாலை வசதிகள் இருப்பதால், நெற் பயிர் முதல் காய்கறி, பூ வகைகள் வரை அனைத்தையும் விவசாயிகள் நகர் பகுதிகளுக்கு எளிதில் கொண்டு வந்து விற்க முடிகிறது. இந்த சாதகமான அம்சமே மாவட்டத்தின் விவசாய உற்பத்திக்கு பாதகத்தையும் ஏற்படுத்தும் சூழல் உருவாகி வருகிறது. தற்போது திருவள்ளூர் மாவட்டத்தின் பல பகுதிகள் சென்னை புறநகர் பகுதியாகவே மாறிவிட்ட நிலையில், விவசாய நிலங்கள் குடியிருப்புகளாகவும், தொழில்பேட்டைகளாகவும் மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
உதாரணமாக, திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி அருகே திருமழிசையை ஒட்டி நேமம் ஏரியின் கீழ் பாசன வசதியுள்ள வெள்வேடு, குத்தம்பாக்கம், நேமம், படூர்மேடு, உட்கோட்டை, இருளப்பாளையம், நரசிங்கபுரம், பர்வதராஜபுரம், அக்ராவரம், செம்பரம்பாக்கம், நெடுஞ்சேரி, திருமழிசை, மேட்டுத்தாங்கல் சார்ந்த 15 கிராமங்களில் 4 ஆயிரம் ஏக்கர் விளை நிலம் ஒரே சதுரமாக உள்ளது. தஞ்சைக்கு இணையாக நெல் உற்பத்தியில் இப்பகுதி புகழ் பெற்றது. கடும் வறட்சிக் காலங்களிலும், இப்பகுதிகளில் நிலத்தடி நீர் வற்றாமல் நெல் உள்ளிட்ட உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டு சென்னை உள்ளிட்ட நகர மக்களின் பசியை போக்கிய பெருமையும் இப்பகுதிக்கு உண்டு. ஆனால், இப்பகுதிகள் அடுத்த பத்தாண்டுகளில் அடையாளம் மாறக்கூடிய அபாயம் உள்ளது. உணவு பாதுகாப்பு மற்றும் விலைவாசி கட்டுப்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு இதுபோன்ற விவசாயப் பகுதிகளை அரசு தக்க வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். அதோடு, இப்பகுதிகளில் விவசாயத் தொழிலை ஊக்குவிக்கவும், வேண்டிய ஒத்துழைப்பை வழங்கவும் ஏதுவாக இதுபோன்ற பகுதிகளை சிறப்பு விவசாய மண்டலமாக அறிவிக்க வேண்டும்.
இதன் மூலம், விவசாயிகளுக்கு நியாயமான வாடகைக் கட்டணத்தில் பண்ணை இயந்திரங்கள், தங்கு தடையற்ற உர வினியோகம், உரிய விலையில் கொள்முதல், நவீன வேளாண் தொழில்நுட்ப உதவிகள் போன்றவற்றை வழங்க இயலும் என மாவட்ட விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.
இதுகுறித்து திருவள்ளூர் மாவட்ட அனைத்து கிராம விவசாய சங்கத்தைச் சேர்ந்த பத்மநாபன் கூறும்போது, "தொழில்துறையில் பன்னாட்டு முதலீடுகளை ஈர்க்கவும், வேலைவாய்ப்பு, பொருளாதாரம், உற்பத்தியை பெருக்கவும் சிறப்பு சலுகைகளுடன் நிலம் மற்றும் உள்கட்டமைப்பு

வசதிகளோடு நாடெங்கிலும் சிறப்பு பொருளாதார மண்டலங்களை அரசு ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், நாட்டின் அதிமுக்கிய பூர்வீக தொழிலான விவசாயத் துறைக்கு ஊக்கமளித்து உற்பத்தியை பெருக்க சிறப்பு விவசாய மண்டலங்களை அரசு அறிவித்தால் நல்ல பலன் கிடைக்கும். மேலும், சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்காக விளை நிலங்களை அபகரித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை ஈடுகட்ட இம்முயற்சி அரசுக்கு கைகொடுக்கவும் வாய்ப்புள்ளது,' என்றார்.பெ.முத்துகிருஷ்ணன்

**புவனகிரி வட்டார வேளாண் அலுவலகங்களில் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,00:25 IST

புவனகிரி : புவனகிரி வட்டார வேளாண்மை அலுவலகங்களில் வேளாண் துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். இதுகுறித்து புவனகிரி வேளாண்மை உதவி இயக்குனர் கனகசபை விடுத்துள்ள செய்திக்குறிப்பு: புவனகிரி வட்டாரத்தில் உள்ள எறும்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் இயங்கி வரும் அக்ரி கிளினிக் மற்றும் நத்தமேடு கிராமத்தில் முன்பருவ இயக்க முகாமிற்கு கடலூர் வேளாண்மை துணை இயக்குனர் சந்திரமோகன், பேராசிரியை சிருஷ்டியுடன் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.
அப்போது அங்கு வந்த புவனகிரி வட்டார விவசாயிகளிடையே அவர்கள் தங்களது வயல்களிலிருந்து கொண்டு வந்த மண்ணையும், ஆழ்குழாய் கிணற்றின் நீரையும் பரிசோதனை செய்திடவும், பரிசோதனை முடிவுப்படி உரமிடவும்,விவசாயிகளுக்கு பரிந்துரை செய்தனர். மேலும் பசுந்தாள் உரவிதையை 50 சதவீத மான்ய விலையில் பெற்று கோடை உழவு செய்து பசுந்தாள் உரவிதையை தெளித்து நெய்வேலி தண்ணீரை பயன்படுத்தி நன்கு பராமரித்திட விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினர்.

**கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,00:25 IST

கிள்ளை : சிதம்பரம் அடுத்த கோவிலாம்பூண்டியில் கால்நடை துறை சார்பில் கால்நடைகளுக்கு ஆந்த்ராக்ஸ் நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் சிவசுப்ரமணியன், துணைத் தலைவர் பாலு, வார்டு உறுப்பினர் கணேசன் முன்னிலை வகித்தனர். டாக்டர் பூங்குழலி தலைமையில் ஆய்வாளர் மாசிலாமணி, உதவியாளர் வைத்தியநாதன் உள்ளிட்ட மருத்துவக்

குழுவினர் 480 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர். முகாமில் கோவிலாம்பூண்டி, மீதிக்குடி, கந்தமங்கலம் உள்ளிட்ட சுற்றுப்பகுதி கிராம விவசாயிகள் பயனடைந்தனர்.

**இயற்கை உரங்களை இடுவீர் இணை இயக்குனர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,01:07 IST

விழுப்புரம் : விவசாயத்தில் மண் வளத்தைப் பாதுகாத்து நல்ல மகசூல் பெற இயற்கை உரங்களை இட வேண்டும். இது குறித்து வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன் கூறியதாவது: விவசாயிகள் மண் பரிசோதனை செய்து தேவைப்படும் ரசாயன உரங்களை அளவாக இடவேண்டும். இயற்கையான தொழு உரம், பசுந்தாள் உரம், மற்றும் தழை உரங்களை போதியளவு இடவேண்டும். காற்றில் உள்ள தழைச் சத்தை கிரகிக்கும் உயிர் உரங்களை இட வேண்டும். பாசன நீர் பரிசோதனை செய்தும், உரிய நீர் மேலாண்மை முறைகளை கடைபிடித்து மண்வளத்தை பாதுகாத்தல் வேண்டும். படிகட்டு சாகுபடி, குறுக்குச் சாலர் உழவு செய்தல், மரங்களை நடவு செய்தல், வேர் பிடிப்பு மிக்க வெட்டிவேர், கற்றாழை போன்ற பயிர்களை சாகுபடி செய்து மண் அரிமானத்தை தடுத்தல், வடிகால் வசதியை சீராக்கி, மண் வகைக்கேற்ப பயிர்களை தேர்ந்தெடுத்து சாகுபடி செய்ய வேண்டும். இவ்வாறு வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன் கூறினார்.

**சந்தியூர் வேளாண் நிலையத்தில் 16ம் தேதி மஞ்சள் சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,01:34 IST

பனமரத்துப்பட்டி: "சந்தியூர் வேளாண் நிலையத்தில், வரும் 16ம் தேதி நடக்கும் மஞ்சள் சாகுபடி தொழில் நுட்ப பயிற்சியில், விவசாயிகள் பங்கேற்க வேண்டும்' என, வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: சேலம் மாவட்டத்தில், தோட்டக்கலை பயிர்களில் மரவள்ளிக்கு அடுத்தபடியாக மஞ்சள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். விதை கிழங்கு நேர்த்தி, நடவு முறை, நுண்ணூட்ட சத்து குறைபாடு, நோய் மேலாண்மை, அறுவடைக்கு பின் நேர்த்தி உள்ளிட்ட குறைபாடு காரணமாக மஞ்சள் மகசூல் குறைகிறது. கடந்த ஆண்டு கிழங்கு அழுகல் நோய் காரணமாக, மஞ்சள் மகசூல் பாதிக்கப்பட்டது.சொட்டுநீர் பாசனம் மூலம் மஞ்சள் சாகுபடி செய்வதால், உர செலவு பாதியாக குறைகிறது. சாகுபடி செய்யப்படும் நிலத்தின் மண் மற்றும் நீர் பரிசோதனை செய்வது மிக அவசியமாகும். தற்போது, மஞ்சள் நடவு

காலம் என்பதால், விவசாயிகளுக்கு மஞ்சள் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி, வரும் 16ம் தேதி, சந்தியூரில் நடக்கிறது. பயிற்சிக்கு வரும் விவசாயிகள், தங்கள் நிலத்தின் மண் மற்றும் நீரினை பரிசோதனைக்கு எடுத்து வரலாம். மண் பரிசோதனைக்கு, 25 ரூபாய், நீர் பரிசோதனைக்கு, 10 ரூபாய் கட்டணம் செலுத்தவேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மானாவாரி சாகுபடி செய்யும் விவசாயிகள் அங்கக வேளாண்மை முறையை கையாள வேண்டும்**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,02:00 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் மானாவாரி சாகுபடி செய்யும் விவசாயிகள் அங்கக வேளாண்மை முறை யை கையாண்டு நஞ்சில்லா சுத்தமான சுவையான உணவுப்பொருட்களை உற்பத்தி செய்யலாம் என்று வேளாண்மை துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.
தூத்துக்குடி உழவர் பயிற்சி நிலைய வேளாண் மை துணை இயக்குநர் குருமூர்த்தி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியுள்ளதாவது; இயற்கையாக கிடைக்கும் எந்தவொரு வேளாண் இடுபொருளையும் சுற்றுச்சூழலுக்கு தீங்கிழைக்கா வண்ணமும் மண் வளத்தையும் நலத்தையும் பேணி மனித மற்றும் கால்நடை வளத்தையும் காக்கும் வண்ணமும் பயன்படுத்தி இயற்கை வளத்தினை பாதுகாத்து மேம்படுத்தி வேளாண்மை செய்வதே அங்கக வேளாண்மை ஆகும். பயிற் சுழற்சி, ஊடுபயிர், கவர்ச்சிப்பயிர், நீர் மேலாண்மை, சரியான விதைக்கும் மற்றும் அறுவடை செய்யும் பருவம் ஆகியவற்றை கடைபிடிப்பதன் மூலம் பூச்சி நோய்களால் ஏற்படும் பாதிப்பை வெகுவாக குறைக்கலாம். பல்வேறு இயற்கை சக்திகளான வெப்பம், குளிர்ச்சி, ஒளி மற்றும் ஒலி ஆகியவற்றைக் கொண்டு பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக தானியங்களை நன்கு வெயிலில் காயவைத்து அதன் ஈரப்பதத்தை 8ல் இருந்து 10 சதவீதம் என்ற அளவுக்கு குறைப்பதன் மூலம் பூச்சி மற்றும் பூஞ்சானங்களை தவிர்க்கலாம். மஞ்சள் நிற ஒட்டுப்பொறி, கருவாட்டுபொறி போன்றவற்றைக் கொண்டும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

இயற்கை வேளாண்மையில் பயிர் செய்ய பூச்சி நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட ரகங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக நெல்லில் புகையான் எதிர்ப்புத்திறன் கொண்ட கோ 42, தண்டுதுளைப்பான் எதிர்ப்புதிறன் கொண்ட டி.கே.எம்.6, சோளத்தில் குருத்து ஈயைத் தாங்கி வளரும் கோ 1 மற்றும் பருத்தியில் தண்டுக் கூன்வண்டு எதிர்ப்புத்திறன் கொண்ட எம்.சி.யு3 போன்ற ரகங்களை பயன்படுத்தலாம். பூச்சிகளை தாக்கி அழிக்க வல்ல உயிரினங்களை கொண்டு பயிரை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தலாம். பொறி வண்டு, பச்சை கண்ணாடி, இறக்கைப்பூச்சி போன்ற உண்ணிகள், டிரைக்கோகிராமா, பிராக்கான் போன்ற ஒட்டுண்ணிகள்

மற்றும் பாக்டீரியா, வைரஸ் மற்றும் பூஞ்சானங்கள் ஆகியவற்றைக் கொண்டும் பூச்சிகளை அழிக்கலாம்.

பயிர்களைத் தாக்கும் நோய்களை சூடோமோனஸ், டிரைக்கோ டெர்மா போன்ற நுண்ணுயிரிகளுடன் விதை நேர்த்தி மூலமோ மண்ணில் இட்டோ கட்டுப்படுத்தலாம். பயிர்களை அழிக்கும் பூச்சிகளை இனக்கவர்ச்சிப் பொறிகளை பயன்படுத்தி சரியான தருணத்தில் கட்டுப்படுத்தலாம். தாவரங்களிலிருந்து கிடைக்கும் பூச்சிக் கொல்லிகளை இயற்கை வேளாண்மையில் பயன்படுத்தலாம். வேம்பு, நொச்சி, பூண்டு ஆகியவற்றின் கரைசல்கள் பல்வேறு பூச்சிகளை கட்டுப்படுத்துவதை கண்டறியப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் மானாவாரி சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் மேற்கண்ட உத்திகளை கையாண்டு பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்துவதன் மூலம் குறைந்த பயிர் உற்பத்தி செலவில் மண்வளம் மற்றும் நீரின் தன்மை மாறாமல் பாதுகாத்து நஞ்சில்லா சுத்தமான சுவையான உணவுப்பொருட்களை உற்பத்தி செய்யலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**பயிர் மதிப்பீட்டு புள்ளி விபரம் தருவதில் அதிகாரிகள் மெத்தனம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,00:20 IST

தர்மபுரி: பயிர் மதிப்பீடு ஆய்வு செய்து, மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களுக்கு பகுப்பாய்வு புள்ளி விபரங்களை உரிய நேரத்தில் அதிகாரிகள் வழங்காமல் காலம் கடத்துவதால், விவசாயிகளுக்கு அரசு வழங்கும் திட்டங்கள் மற்றும் தொழிநுட்ப ஆலோசனைகள் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. வேளாண் துறை சார்பில், பயிர் மதிப்பீட்டு ஆய்வு செய்யும் அலுவலர்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டு, கள ஆய்வு செய்து புள்ளியில் துறைக்கு விபரங்களை அளிப்பதின் மூலம் மாவட்டத்தில் வேளாண்துறை வளர்ச்சி, தானிய உற்பத்தி மற்றும் விவசாயிகளுக்கு தேவைப்படும் திட்டங்கள் குறித்து அரசு நிதியை பகிர்ந்தளிக்கும்.

புள்ளி விபர ஆய்வில் அலுவலர்கள் பயிர் மதிப்பீட்டாய்வு, தேசிய வேளாண் காப்பீடு திட்டங்களின் கீழ் பயிர் அறுவடை பரிசோதனைகள், உணவு பயிர்கள், உணவில்லாத பயிர்களில் புள்ளியல் ஆய்வு, புள்ளியில் துறை, வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படும் அறுவடை பரிசோதனைகள் குறித்து பயிற்சி அலுவலர்கள் பகுப்பாய்வு புள்ளி விபரங்களை சேகரிக்க வேண்டும்.
தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் விவசாயத் தொழிலை பிரதானமாக கொண்டது. மொத்த பரப்பளவில், 64 சதவீதம் விவசாயப் பரப்புகள் கொண்டுள்ளது. தானியப்பயிர்கள் மற்றும்

எண்ணைய் வித்துகள் தர்மபுரி மாவட்டத்தில் அதிக அளவு பயிரிடப்படுகிறது. இதைத்தவிர பணப்பயிர்கள் பரவலாக பயிரிடப்பட்டுவருகிறது. விவசாய தொழில்நுட்ப முறைகள் விவசாயிகள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லாததால், உற்பத்தி சரிவர கிடைப்பதில்லை. மேலும், அரசு வழங்கும் விவசாய திட்டங்களுக்கான பலன்களை பெறமுடியாத நிலையில், பெரும்பாலான விவசாயிகள் உள்ளனர்.

இது குறித்து வேளாண்துறை அலுவலர் ஒருவர் கூறியதாவது: ஆண்டுதோறும் பொருள் இயல் மற்றும் புள்ளியியல் துறையால் வழங்கப்படும் எதேச்சை எண் முறையை பின்பற்றி ஆய்வு நடத்தப்பட்டு, ஒவ்வொரு வகை பயிரிலும் பயிர் மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய கிராமங்கள் எண்ணிக்கை, பயிர்களின் பரப்பளவு, விளைச்சல் விபரங்களின் அளவு ஆகியவற்றை கொண்டு மாநில அளவில் நிர்ணயிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டங்களுக்கு இடையே, அந்த பயிர் பரப்பளவு அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இந்த முறையை பின்பற்றி, ஒவ்வொரு ஆய்வு பயிர்களுக்கும் தேவையான மாதிரி கிராமங்கள் தேர்வு செய்து, அந்த ஒவ்வொரு மாதிரி கிராமத்திலும் எதேச்சை முறையில் இரண்டு வயல்கள் தேர்வு செய்யப்படும். தேர்வு செய்யப்படும் வயல்களில் அமைக்கப்படும் குறிப்பிட்ட அளவுள்ள பரிசோதனை திடலில் பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வகை பயிரிலும், இரண்டு அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பயிர்களின் விளைச்சல் (ஒரு ஹெக்டேருக்கு) மொத்த உற்பத்தி ஆகிய விபரங்களை மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் துல்லியமாக கணிப்பதற்கு பயிர் மதிப்பீட்டாய்வு, புதுடெல்லி தேசிய மாதிரி ஆய்வு நிறுவன இயக்குனரின் தொழில் நுட்ப ஆலோசனையின் கீழ் நடக்கிறது.

ஆய்வுகளின் போது, புள்ளி விபரங்களை சேகரித்து தொகுத்து பகுப்பாய்வு செய்வதற்கும், விளைச்சல் விபரங்களை துல்லியமாக கணித்து மத்திய, மாநில அரசுக்கும் மற்றும் பிற துறைகளுக்கும் தெரிவிக்கும் பணியையும் புள்ளியியல் துறையினர் மேற்கொள்கின்றனர். கள ஆய்வு செய்யும் அலுவலர்கள், பழைய புள்ளிவிபரங்களை அளித்து விடுகின்றனர். பயிர் மதிப்பீட்டாய்வு நடத்தும் அலுவலர்கள் உரிய நேரத்தில் உரிய இடத்தில் பகுப்பாய்பு பணிகளை மேற்கொள்வதில்லை. இதனால், விவசாயிகள் தொடர்ந்து இந்த மாவட்டத்தில் பாதிப்படைந்து வருகின்றனர்.

**வறண்டு கிடக்கும் நீர் ஆதாரங்கள்: விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,00:16 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், நீர்நிலைகளில் தண்ணீர் மட்டம் குறைந்து வறட்சி ஏற்பட்டு வருவதாலும், தென்மேற்கு பருவமழை பொய்த்து வருவதாலும், விவசாயிகள் மத்தியல் கலக்கம் ஏற்பட்டுள்ளது. விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், பருவமழையை நம்பி விவசாயம் நடந்துவருகிறது. ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழை துவக்கம் முதலே விவசாயிகள் பயிர் தொழில் ஈடுபடுவர். குறிப்பாக பாலக்கோடு, பென்னாகரம் பகுதியையொட்டியுள்ள பகுதிகளில் நீர் தேக்கம் பகுதிகள் அதிகமாகவுள்ளதால், நீர்மட்டம் அதிகரித்து விவசாயிகளுக்கு கைகொடுக்கும். தற்போது கோடை மழை ஓரளவு விவசாயிகளுக்கு கை கொடுத்த நிலையில், பருவமழையும் தொடர்ந்திருந்தால், விவசாயிகள் தொடர்ந்து உணவு தானிய உற்பத்தியில் ஈடுபட்டிருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். மேலும், அக்னி வெயில் முடியும் நேரத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்ததால், மாவட்டத்தில் உள்ள நீர் ஆதாரங்கள் அனைத்தும் தண்ணீர் இன்றி வறண்டது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால், கோடை சாகுபடியில் எதிர்பார்த்த பயிர் உற்பத்தியை அதிகரிக்க முடியாமல் விவசாயிகள் திணறினர். மாவட்டத்தின் பல இடங்களில் தென்மேற்கு பருவமழையை எதிர்பார்த்து குறுவை சாகுபடி துவக்கப்பட்டுள்ள நிலையில், பருவமழை தாக்கம் இல்லாமல் நீர்நிலையில் இருக்கும் தண்ணீர் மட்டம் குறைந்துவருவது விவசாயிகள் மத்தியில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**கூடுதல் விலைக்கு உரம் விற்பனை வேளாண் துறை கடும் எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,00:13 IST

தர்மபுரி: "தர்மபுரி மாவட்டத்தில், தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை நிலையங்களில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என வேளாண் துறை எச்சரித்துள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்து கடைகளில் அரசு நிர்ணயித்துள்ள விலையை விட கூடுதல் விலைக்கு உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாக, வேளாண்துறைக்கு விவசாயிகளிடமிருந்து தொடர்ந்து புகார் வருகிறது. உரக்கட்டுப்பாடு சட்டம் 1985ன்படி தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை நிலையங்களில், சிறப்பு ஆய்வு குழுவினர் ஆய்வு செய்யவுள்ளனர். ஆய்வின் போது, உரக்கட்டுப்பாடு சட்டத்தின்படி அனைத்து உர விற்பனை நிலையங்களிலும் உரங்களின் விலை குறிக்கப்பட்ட தகவல் பலகைகளை பார்வைக்கு வைக்காத உர விற்பனை நிலையங்களை, 15 நாட்கள் உரம் விற்பனை செய்ய தடை விதிக்கப்படும். விவசாயிகள் உரம்

வாங்கும் பொழுது வாங்கும் உரத்துக்கு விற்பனை ரசீது, விவசாயிகளின் முழு முகவரியினை பூர்த்தி செய்து உரத்தின் விவரம் மற்றும் அதன் விற்பனை விலையை தெளிவாக குறித்து ரசீதில் கையொப்பம் பெற்று ரசீதின் நகலை விவசாயிகளுக்கு, விற்பனையாளர்கள் வழங்க வேண்டும். கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவது உள்ளிட்ட விதிமீறல் புகார்கள் வரப்பெற்றால், உர விற்பனை கடைகளில் ஆய்வு செய்து கடும் நடவடிக்கை எடுப்பதுடன் உர உரிமம் உடனடியாக ரத்து செய்யப்படும். இதே உத்தரவுகளை பூச்சி மருந்துகளை விற்பனை செய்யும் நிலையங்களும் பின்பற்ற வேண்டும், என வேளாண்துறை தெரிவித்துள்ளது.

**கரும்புக்கு அரசு நிர்ணயிக்கும் விலைடன்னுக்கு மூவாயிரம் ரூபாய் தேவை**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,03:07 IST

மதுரை:தமிழக அரசு அரவை கரும்பு டன்னுக்கு ரூ.2,500 வழங்குவதுடன், விவசாயிகள் நலன் கருதி அதை ரூ.மூவாயிரமாக உயர்த்தி கொடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. கரும்பு பயிரிடுவதை அதிகரிக்கவும் அரசு வழிவகைகள் காண வேண்டும்.விழுப்புரம், கடலூர், ஈரோடு, நாமக்கல், திருவண்ணாமலை, மதுரை போன்ற மாவட்டங்களில் சுமார் எட்டு லட்சம் ஏக்கர் நிலங்களில் கரும்பு பயிரிடப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் மேலூர், அலங்காநல்லூர், வாடிப்பட்டி பகுதியில் ஏழாயிரம் எக்டேர் பரப்பில் கரும்பு பயிரிடப்படுகிறது. கரும்புக்குரிய விலை கிடைக்காமை, உற்பத்தி செலவு அதிகரிப்பு போன்றவைகளால் மாவட்டத்தில் கடந்தாண்டு 3,840 எக்டேரில் மட்டும் கரும்பு பயிரிடப்பட்டது. ஒரு எக்டேர் பரப்பில் 85 டன் வரை கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. நெல் பயிருடன் ஒப்பிடுகையில் கரும்பு சாகுபடிக்கு பத்து மாதங்கள் தேவை. தண்ணீர் தேவையும் அதிகம். கரும்பு டன்னுக்கு ரூ.1,900 வரை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. ரூ.2 ஆயிரத்திற்கு குறையாமல் வழங்க விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் விவசாயிகளுக்குரிய நிலுவை தொகை வழங்கப்படவில்லை. இதனால் விவசாயிகள் கரும்புகளை அனுப்ப தயங்குகின்றனர். இதை தனியார் ஆலைகள் பயன்படுத்தி கொள்கின்றனர். உரிய விலை கிடைக்காததால், நெல், வாழை போன்ற மாற்று பயிர்களை நடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர். கரும்பு பயிரிடும் நிலப்பரப்பு குறையும் அவலம் உள்ளது.தற்போது நிலவும் பிரச்னைகள் குறித்து கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் சமீபத்தில் ஆலோசனை நடத்தினர். கரும்புக்குரிய விலை, நிலுவை தொகையை வழங்குவது குறித்து அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டன.

கரும்பு விவசாயிகள் சங்க மாநில தலைவர் என்.பழனிச்சாமி கூறியதாவது: 2011-2012ம் ஆண்டுக்கு கரும்பு விலையை நிர்ணயிக்க முத்தரப்பு கூட்டத்தை கூட்ட வேண்டும். அ.தி.மு.க., தேர்தல் அறிக்கையில் ஆட்சிக்கு வந்தால், கரும்பு டன்னுக்கு ரூ.2,500 வழங்கப்படும் என தெரிவித்திருந்தது. தற்போதைய நிலையில் உற்பத்தி செலவு அதிகமாக இருப்பதால், டன்னுக்கு

ரூ.மூவாயிரம் வழங்க வேண்டும். கரும்பு வெட்டும் கூலி தொழிலாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால், அவர்களுக்கு பதிலாக ஆலை நிர்வாகங்கள் கரும்பு வெட்டும் இயந்திரங்களை வரவழைத்து பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும். விவசாயிகள், கரும்பு வெட்டும் மேஸ்திரிகள், ஆலை நிர்வாக அதிகாரிகள் கூட்டத்தை கூட்டி, சீரான வெட்டுக்கூலியை நிர்ணயிக்க வேண்டும். கூலியை ஆலை நிர்வாகம் ஏற்க அரசு உத்தரவிட வேண்டும். தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க சொட்டு நீர் பாசனம் போன்ற முறைகளை மேற்கொள்ள விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும். வேறு சில மாவட்டங்களில் ஏற்கனவே தனியார் ஆலைகளுக்கு மாற்றப்பட்ட பொது துறை மற்றும் கூட்டுறவு ஆலை கரும்பு பகுதிகளை ரத்து செய்து, பழைய நிலையை தொடர செய்ய வேண்டும். தனியார் ஆலைகளில் எடை மோசடியை தடுக்க, அரசு சார்பில் ஆலை வாயில்கள் முன் எடை மேடைகளை அமைத்து கொடுக்க வேண்டும். இதன் மூலம் வேலை வாய்ப்பு கிடைக்கும், என்றார்.

**மஞ்சள் விலை தொடர் சரிவு இருப்பு வைக்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,01:27 IST

ஆத்தூர்: மஞ்சள் விலை தொடர் சரிவை நோக்கிச் செல்லும் நிலையில், ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 1,000 மூட்டை மஞ்சள், 35 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், தனியார் கமிஷன் மண்டிகளில், சனிக்கிழமை தோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. இந்நிலையில், கடந்த மார்ச் மாதம் துவங்கிய ஏலத்தில், மஞ்சள் குவிண்டால், 12 ஆயிரத்து 600 ரூபாய்க்கு விற்றது. அதன்பின் அடுத்தடுத்த வாரங்களில், விலை சரிவை நோக்கிச் சென்றது. அதன் எதிரொலியாக, கடந்த, 4ம் தேதி நடக்க இருந்த மஞ்சள் ஏலம், வியாபாரிகள் கலந்து கொள்ளாததால் ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 4,666 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 8,789 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 4,169 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 6,789 ரூபாய்க்கும் விற்றது. 1,000 மூட்டை மஞ்சள், 35 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. மஞ்சள் விலை சரிவை நோக்கிச் செல்வதால், விவசாயிகள் இருப்பு வைக்க துவங்கியுள்ளனர்.

**சேமிப்பு கிடங்கு அமைக்க விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,00:23 IST

கடலூர் : சேமிப்பு கிடங்கு அமைக்க வேண்டுமென கடலூரில் நடந்த குறைகேட்பு கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். சட்டசபை தேர்தல் முடிவடைந்த நிலையில் முதன் முதலாக கடலூர் செம்மண்டலத்தில் விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் இயக்குனர் தனவேல், துணை இயக்குனர் சந்திரமோகன், வேளாண் பொறியியல் வேளாண் விற்பனை விதைச் சான்று, மின்சார வாரியம், பொதுப்பணித்துறை நீர் பாசன அலுவலர்கள் பங்கேற்றனர். ஒவ்வொரு தாலுகாவிலும் சேமிப்பு கிடங்கு மற்றும் உலர்களம் அமைக்க வேண்டும். சின்னகங்கணாங் குப்பத்தில் இருந்து சொர்ணாவூர் அணைக்கட்டு வரை பெண்ணையாற்றங்கரையோரமாக சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கூட்டத்தில் வலியுறுத்தினர். ஒவ்வொரு குறைகேட்புக் கூட்டத்திலும் விவசாயிகள் பெருமளவு பங்கேற்று தங்களின் குறைகளை தெரிவிப்பார்கள். ஆனால் கடந்த 10ம் தேதி நடந்த கூட்டத்தில் விவசாயிகள் விரல் விட்டு எண்ணும் அளவில் குறைவாக பங்கேற்றதால் இருக்கைகள் காலியாகவே கிடந்தன.

**காடு வளர்ப்பு திட்டத்தில் முறைகேடு?ஆய்வுக்கு வனத்துறைக்கு வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 13,2011,01:25 IST

ஈரோடு: காடு வளர்ப்பு திட்டத்தை மேம்படுத்த வேண்டுமெனில் ஊக்கத் தொகையை அதிகரிக்க வேண்டும் என்றும், மாதம் ஒரு முறை விவசாயிகள் வளர்த்து வரும் மரக்கன்றுகளை சோதனை செய்ய வேண்டும் என, வனத்துறையினருக்கு, விவசாயிகள் யோசனை தெரிவித்துள்ளனர். தேசிய வனக் கொள்கையின் படி, "பூமியில் மூன்றில் ஒரு பங்கு நிலத்தில் மரம் வளர்க்க வேண்டும்' என, தமிழக அரசு 1988ல் அறிவித்தது. இதன் தொடர் நடவடிக்கையாக, 2007-08 முதல், தனியார் நிலங்களில் காடு வளர்ப்பு திட்டத்தை தமிழக அரசு அறிவித்தது. வனங்களை பெருக்கவும், அதன் மூலம் விவசாயிகளும் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தை அரசு அறிவித்தது. மரம் வளர்ப்பு மூலம் விவசாயிகளும் பயன்பெற்று வந்தனர். இத்திட்டத்துக்காக, தேக்கு, மலை வேம்பு, பீயன், சில்வர் ஓக், வேம்பு, குமிழ் உள்ளிட்ட மரக்கன்றுகளை, வனத்துறை வழங்கியது.
மாவட்டந்தோறும் 10 லட்சம் மரக்கன்றுகள் வழங்கப்பட்ட போதும், விளம்பரம், விவசாயிகளிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல், கண்காணிப்பு ஆகியவற்றில் பெருமளவு வனத்துறையினர் ஆர்வம் காட்டாததால், காடு வளர்ப்பு திட்டம் விவசாயிகளை சென்றடையவில்லை. தனியார் நிலங்களில்

காடு வளர்ப்பு திட்டத்தை மேம்படுத்தும் நடவடிக்கையை வனத்துறையினர் முடுக்கி விட வேண்டும் என்று விவசாயிகள் யோசனை தெரிவித்துள்ளனர். ஒரு சில விவசாயிகள் மரக்கன்றுகளை விற்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர். விவசாயிகள் கூறியதாவது: தனியார் காடு வளர்ப்பு திட்டத்தை, விவசாயிகளிடம் கொண்டு சேர்ப்பதில் வனத்துறை தவறி விட்டது. மரக்கன்றுகள் முறையாக வளர்க்கப்படுகிறதா என்பதையும் கண்காணிக்க வனத்துறையினர் ஈடுபாடு காட்டவில்லை. இதனால், காடு வளர்ப்பு திட்டத்தில் வழங்கப்படும் மரக்கன்றுகளை, வெளிச்சந்தையில் விவசாயிகள் விற்பனை செய்து விடுகின்றனர். வனத்துறையினர் சோதனையின் போது சிக்கி கொண்டால், செடி அழுகி விட்டதாகவும், இயற்கையை காரணம் காட்டியும் விவசாயிகள் தப்பித்து கொள்கின்றனர். எனவே, காடு வளர்ப்பு திட்டத்தை வனத்துறையினர் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். காடு வளர்ப்பு திட்டத்தில் ஈடுபடும் விவசாயிக்கு, ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகையை உயர்த்தி தர வேண்டும். அப்போதுதான், காடு வளர்ப்பு திட்டத்தில் மரம் வளர்க்க விவசாயிகள் விரும்புவர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**விதை நேர்த்தி செய்ய வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2011,02:19 IST

ஓசூர்: ""மானாவாரி நிலங்களில்விதை நேர்த்தி செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும், '' என ஓசூர் வேளாண் உதவி இயக்குனர் நாகராஜ் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: ஓசூர் தாலுகாவில் தற்போது மானாவாரி நிலங்களில் விதைப்பு துவங்கியுள்ளது. இவற்றில் நிலக்கடலை மற்றும் துவரை பயிர் சாகுபடியில் பூஞ்சாண விதை நேர்த்தி மற்றும் நுண்ணுயிர் உரவிதை நேர்த்தி செய்ய வேண்டும். பூஞ்சாண விதை நேர்த்தி செய்வதின் மூலம் விதைகள் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தி பயிர் எண்ணிக்கையை பராமரிக்க ஏதுவாகிறது. நுண்ணுயிர் உரவிதை நேர்த்தி செய்வதின் மூலம் விதைகள் நன்கு முளைத்து நல்ல வேர் வளர்ச்சி மற்றும் தண்டு வளர்ச்சியுடன் காணப்படும். பயிர்கள் ஒரளவிற்கு வறட்சியை தாங்கி வளரும். இந்த நுண்ணுயிர்கள் வேர் முடிச்சுகளில் தங்கி வாயு மண்டலத்தில் உள்ள தழைசத்தை செடிகளுக்கு வழங்கும். இதன் மூலம் உரசெவிற்கான செலவினம் குறைந்து வருமானம் அதிகரிக்கும். பூஞ்சாண விதை நேர்த்தி செய்யும் போது ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பண்டாசியம் அல்லது 4 கிராம் மேங்கோசெப் அல்லது 4 கிராம் டிரைக்கோடெர்மாவிரிடி ஆகியவற்றை கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும். அதேபோல் நுண்ணுயிர் உரங்களான பாஸ்போ பாக்டீரியா மற்றும் ரைசோபியம் நுண்ணுயிர் கலவையினை விதைப்பதற்கு முன் கலந்து விதைக்க வேண்டும்.

நிலக்கடலை பயிருக்கு ஒரு ஏக்கருக்கு உண்டான 55 கிலோ பருப்புக்கு 2 பாக்கெட் ரைசோபியம் 2 பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றை 500 மில்லி அரிசி கஞ்சியில் கலந்து அதனை விதைகளுடன் கலக்க வேண்டும். அதன்பின் அவ்விதைகளை நிழலில் உலர வைத்து விதைக்க வேண்டும். பயிறு வகை விதைகளுக்கு 1 கிலோ விதைகளுக்கு 1 பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா மற்றும் 1 பாக்கெட் ரைசோபியம் பயன்படுத்த வேண்டும். தேவையான அளவு உயிர் உரங்கள் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பில் உள்ளது. அதை விவசாயிகள் 50 சதவீதம் மானிய விலையில் பெற்று பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டு கொள்கிறோம். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**ஈரோடுக்கு காய் வரத்து கணிசமாக அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2011,01:48 IST

ஈரோடு: தமிழகத்தில் பெய்து வரும் பருவமழை காரணமாக ஈரோடுக்கு காய்கறி வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கணிக்கோட்டை, ஒசூர், தளி, ராயக்கோட்டை, தர்மபுரி மற்றும் ஈரோடு சுற்றுவட்டார பகுதிகளில் காய்கறி சாகுபடி அதிகமாக நடக்கிறது. நடப்பாண்டு கோடை காலத்தில் யாரும் எதிர்ப்பார்க்காத அளவில் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக காய்கறி விளைச்சல் அமோகமாக உள்ளது. சென்ற மாதத்தை விட, ஈரோடு பெரிய மார்க்கெட்டுக்கு காய்கள் வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. பருவமழையும் துவங்கி இருப்பதால், மேலும் காய் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது என வியாபாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

ஈரோடு காய் வியாபாரி மன்சூர் கூறியதாவது: கோடை வெயிலின் வெப்பம் இரு மாதங்களாக மக்களை மட்டுமல்லாமல், விவசாயமும் பாதிக்கப்பட்டது. கிணற்றில் நீர் இல்லாமல் பயிரிடப்பட்ட காய்கறிகள் தோட்டத்திலேயே வாடின. அப்போது, காய்கள் வரத்து வெகுவாக குறைந்தது. சென்ற மாதம் தமிழகத்தில் ஆங்காங்கே கோடை மழை வெளுத்து வாங்கியது. மழை காரணமாக காய்கறி விளைச்சல் அமோகமாக உள்ளது.
தர்மபுரி, ஒசூர், கிருஷ்ணகிரி, தேன்கணிக்கோட்டை, தாராபுரம், உடுமலை பகுதிகளில் இருந்து அனைத்து வகையான காய்கள் வரத்தாகிறது. தினசரி ஆறு லோடில் இருந்து 10 லோடாக காய் வரதது அதிகரித்துள்ளது. பருவமழை துவங்கியுள்ளதால், காய்கள் விளைச்சல் அதிகரிக்க வாயப்புள்ளது. வரத்தும் இருமடங்கு அதிகரித்து, விலை குறையும். இவ்வாறு அவர் கூறினார்.

**துவங்கிய மழையால் உற்பத்தி பாதிப்பு : தட்டுப்பாடால் விலை உயர வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2011,00:24 IST

பொள்ளாச்சி : கோடை மழை துவங்கியுள்ளதால், கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டு, மார்க்கெட்டில் தட்டுப்பாடு நிலவுகிறது. காங்கேயம் மார்க்கெட்டில், கடந்த 4ம் தேதி நிலவரப்படி, கொப்பரை, கிலோவுக்கு 64 - 66.50 ரூபாய், தேங்காய் எண்ணெய், 15 கிலோ டின்னுக்கு 1,430, தேங்காய் பவுடர், கிலோவுக்கு 98 ரூபாய் விலை கிடைத்தது. விவசாயிகள், சொந்தப் பொறுப்பில் பறித்து உரித்து வைத்த தேங்காய், டன்னுக்கு 17 ஆயிரத்து 500 முதல் 18 ஆயிரம் ரூபாய் வரை விலை கிடைத்தது. சென்னை உட்பட பிற பகுதிகளுக்கு, உணவுத் தேவைக்காக அனுப்பப்படும் தேங்காய், டன்னுக்கு 16 ஆயிரத்து 500 விலை வழங்கப்பட்டது. விவசாயிகள், சொந்தப் பொறுப்பில் பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய், ஒன்றுக்கு 10.50, சொந்தப் பொறுப்பில் பறித்துக் கொள்ள 9.50 வழங்கப்பட்டது. நேற்றைய நிலவரப்படி, கொப்பரை, கிலோவுக்கு 65 - 66.50, தேங்காய் பவுடர், கிலோவுக்கு 99, தேங்காய் எண்ணெய், 15 கிலோ டின்னுக்கு 1,435 ரூபாய் விலை வழங்கப்பட்டது. விவசாயிகள் பறித்து உரித்து, இருப்பு வைத்த தேங்காய், டன்னுக்கு 18 ஆயிரம் முதல் 18 ஆயிரத்து 500, சென்னை உட்பட பிற பகுதிகளுக்கு உணவுத் தேவைக்காக அனுப்பப்படும் தேங்காய், டன்னுக்கு 17 ஆயிரம் நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள் பறித்து இருப்பு வைத்த தேங்காய், ஒன்றுக்கு 10.75 - 11.00 ரூபாய், வியாபாரிகள் சொந்தப் பொறுப்பில் பறித்துக் கொள்ள 10 ரூபாய் வழங்கப்பட்டது. கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறுகையில், "கொப்பரை வரத்து அதிகரிக்கவில்லை. மழை காலம் துவங்கியுள்ளதால், கொப்பரை உற்பத்தி கொஞ்சம் பாதிக்கப்பட்டுள்ளது; மார்க்கெட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மழை தொடர்ந்தால், கொப்பரை உற்பத்தி பாதித்து விலை உயரும்' என்றனர்.

**பருவமழை தீவிரம் குறைந்தது: ஆழியாறு நீர்மட்டம் சரிவு**

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2011,21:30 IST

பொள்ளாச்சி : மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில், தென் மேற்கு பருவமழையின் தீவிரம் குறைந்துள்ளதால், அணைகளுக்கு நீர் வரத்து குறைந்துள்ளது. ஆழியாறு அணையின் நீர்மட்டம் சரியத்துவங்கியுள்ளது. தென்மேற்கு பருவ மழை சீசன் காரணமாக கடந்த இரு வாரமாக மழை பெய்து வருகிறது. சமவெளிப்பகுதிகளை விட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழை பொழிவு அதிகளவு இருந்தது. இதனால், பி.ஏ.பி., திட்ட அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்ததுடன், நீர் மட்டமும் உயர்ந்தது. ஆழியாறு அணையின் நீர்மட்டம் 100 அடியை

தொட்டது. அதன்பின், சமவெளிப்பகுதிகளில் மழை பொழிவு இல்லை. மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் மட்டுமே மழை பொழிவு இருந்தது. இரு நாட்களாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் மழையின் தீவிரம் குறைந்துள்ளது. இதனால், அணைகளுக்கு நீர் வரத்து குறைந்துள்ளது. சோலையாறு அணையின் 160 அடி உயரத்தில், 73.91 அடி உயரத்திற்கு நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 471 கன அடி நீர் வரத்துள்ளது. பரம்பிக்குளம் அணையின் 72 அடி உயரத்தில், 56.90 அடிக்கு நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 248 கனஅடி தண்ணீர் வரத்தும், 75 கனஅடி தண்ணீர் வெளியேற்றமாக உள்ளது. ஆழியாறு அணையின் 120 அடி உயரத்தில் 99.85 அடி உயரத்திற்கு நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 237 கனஅடி நீர்வரத்தாகவும், 342 கன அடி நீர் வெளியேற்றமாகவும் உள்ளது. திருமூர்த்தி அணையின் 60 அடி உயரத்தில் 36.02 அடிக்கு நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு இரண்டு கனஅடி தண்ணீர் வரத்தும், 19 கன அடி தண்ணீர் வெளியேற்றமாகவும் உள்ளது. அமராவதி அணைக்கு விநாடிக்கு 58 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது.

**பருத்தியின் தரத்தை மேம்படுத்த என்ன செய்யலாம்? விவசாயிகளுக்கு வேளாண் பல்கலை யோசனை**

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2011,21:25 IST

கோவை : "இந்தியாவில் பருத்தி மாசுபடுவதால் ஏற்படும் தூய்மைக்குறைவே அதன் தரம் குறைய காரணமாகிறது. அமெரிக்கா மற்றும் சீனாவில் பருத்தி தூய்மை பாதுகாக்கப்படுவதால் சந்தையில் நல்ல விலைக்கு விற்கப்படுகிறது. இந்தியாவிலும் விவசாயிகள் அறுவடை பின்சார்ந்த தொழில்நுட்பங்களைக் கடைபிடித்தால் பருத்தி மாசுபடுவதைத் தவிர்க்கலாம்' என, வேளாண் பல்கலை தெரிவித்துள்ளது.தமிழ்நாடு வேளாண் பல்கலை அறிக்கை:
இந்தியாவில் பருத்தியானது 10.7 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் உள்ளது. இது, உலக உற்பத்தியில் 22 சதவீதமாகும். தமிழகத்தில் பருத்தி பயிரிடும் பரப்பளவு 2000 - 01ல் 1.7 லட்சம் எக்டராகவும், உற்பத்தி 3.17 லட்சம் டன்னாகவும் இருந்தது. அடுத்து 2009 - 10ல் பயிரிடும் பரப்பு 1.04 லட்சம் எக்டராகவும், உற்பத்தி 2.25 லட்சம் டன்னாகவும் மாறியது. இருப்பினும் தமிழகத்தின் பருத்தி உற்பத்தித்திறன் எக்டருக்கு 713 கிலோ என்ற அளவில் இருப்பதால், பருத்தி உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் 90 சதவீதம் பரப்பளவுக்கு மேல் "பி.டி.,' பருத்தி பயிர் செய்யப்பட்டு, முன்னேறி வருகிறது. இதனால், பருத்தி ஏற்றுமதியானது 5 மில்லியன் "பேல்'களாக அதிகரித்துள்ளது.இந்தியாவில் தமிழகத்தில்தான் அதிகப்படியான நூற்பாலைகள் உள்ளன. இவற்றில், 902 ஸ்பின்னிங் மில்கள், 23 காம்போசைட் ஆலைகள், 976 ஸ்பின்னிங்

யூனிட்கள் அடங்கும். கோவையில் மட்டும் 310 ஸ்பின்னிங் ஆலைகள், 13 காம்போசைட் ஆலைகள், 563 ஸ்பின்னிங் யூனிட்கள் உள்ளன. இதன்மூலம், 2.56 லட்சம் தொழிலாளர்கள் பயனடைகிறார்கள்.பருத்தியில் எந்திர அறுவடைக்கு உகந்த செடியின் பரிமாணம், ஒத்திசைவு பூக்கும், வெடிக்கும் தன்மையுள்ள ரகங்களைக் கண்டறிதல் மூலம் பருத்தி அறுவடைக்கு ஆகும் செலவைக் குறைக்கலாம். வரும் 2015ல் மிக அதிக இழை நீளம் கொண்ட பருத்தியின் தேவை 20 லட்சம் "பேல்'களாக இருக்கும். இத்தேவையைப் பூர்த்தி செய்ய இந்தியாவில் 3 முதல் 4 லட்சம் எக்டரில் பருத்தி பயிரிட வேண்டும். தமிழகத்தில் 50 ஆயிரம் எக்டர் அளவில் பருத்தி பயிரிட திட்டமிட வேண்டும். அங்கக (இயற்கை) பருத்தி உற்பத்தியில் துருக்கி மற்றும் இந்தியா முன்னிலையில் உள்ளன.இருப்பினும் நடப்பில் உள்ள ரகங்கள், வீரிய ஒட்டு ரகங்கள் அங்கக பருத்தி பயிரிட உகந்ததாக இல்லை. எனவே, அங்ககத் தன்மைக்கு உகந்த ரகங்கள், வீரிய ஒட்டு ரகங்கள் மற்றும் பயிர் செய்யும் தொழில்நுட்ப முறைகளுக்கான ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும். அங்கக பருத்தியின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் இருந்தாலும், அதன் வெற்றி விவசாயிகளுக்கு கிடைக்கும் லாபத்தைப் பொருத்தது. அங்கக பருத்தியின் மகசூலானது எக்டருக்கு 4 - 5 குவிண்டால் ஆகும். விவசாயிகளுக்கு மகசூலுக்கு ஏற்ற லாபம் கிடைத்தால் மட்டுமே அதனை தொடர்ந்து பயிர் செய்வார்கள். பருத்தி பயிரிட அதிக வேலையாட்கள் தேவைப்படுவதால் நிலத்தை பண்படுத்த, விதைக்க, களை எடுக்க, பூச்சி மருந்து தெளிக்க மற்றும் பருத்தி அறுவடை செய்ய நவீன எந்திரங்களை வேளாண் பொறியாளர்கள் கண்டுபிடிப்பதன் மூலம், பருத்தி உற்பத்திக்கு ஆகும் செலவைக் குறைக்க முடியும். இந்தியாவில் பருத்தி மாசுபடுவதால் ஏற்படும் தூய்மைக்குறைவே அதன் தரம் குறைய காரணமாகிறது. அமெரிக்கா மற்றும் சீனாவில் பருத்தி தூய்மை பாதுகாக்கப்படுவதால் சந்தையில் நல்ல விலைக்கு விற்கப்படுகிறது. இந்தியாவிலும் விவசாயிகள் அறுவடை பின்சார்ந்த தொழில்நுட்பங்களைக் கடைபிடித்தால் பருத்தி மாசுபடுவதைத் தவிர்க்கலாம்.இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**அதிக மகசூல் பெற மண் பரிசோதனை அவசியம்: விவசாயிகளுக்கு "அட்வைஸ்'**

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2011,00:34 IST

வெள்ளகோவில் : வெள்ளகோவில் வேளாண்துறை சார்பில் மண்பரிசோதனை முகாம், முத்தூரை அடுத்த செங்கோடம் பாளையத்தில் நடந்தது. பல்லடம் நடமாடும் மண்பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் பூரணி தலைமை வகித்தார்; உதவி வேளாண் அலுவலர்கள் கோவிந்தராஜ், ராஜசேகரன் மற்றும் முத்தூர் வேளாண் உதவி அலுவலர்கள் ராமமூர்த்தி, சிவலிங்கம் ஆகியோர் விவசாய நிலங்களில் இருந்து மண்மாதிரி எடுத்து, பரிசோதனை செய்தனர். மண்பரிசோதனை நிலைய அலுவலர் பூரணி கூறிதாவது: தானியங்கள், பயிறு வகைகள், எண்ணெய் வித்துக் கள்

என விவசாயிகள் எந்த பயிர் சாகுபடி செய்தாலும், அதற்கு முன் மண்பரிசோதனை செய்வது மிகவும் அவசியம். நெல், நிலக்கடலை, சூரியகாந்தி சாகுபடி செய்யும் முன், ஒரு ஏக்கர் பரப்புக்கு ஒரு மண்மாதிரி வீதம் எடுக்கவேண்டும். "வி' வடிவில் ஒன்றரை அடி ஆழம் தோண்டி மண்மாதிரி சேகரிக்கவேண்டும்; மா, பலா, கொய்யா சாகுபடி செய்வதற்கு, மூன்றடி ஆழத்தில், அடிக்கு ஒரு மண்மாதிரி எடுக்கவேண்டும். மாதிரிகளை வேளாண் அலுவலகம் எடுத்துவந்து, மண்ணில் உள்ள தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து மற்றும் கார, அமிலத்தன்மையை விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம். விளைநிலங்களில் தேவையற்ற உரங்களை பயன்படுத்தாமல், மண்ணின் தன்மைக்கு ஏற்ப வேளாண்துறை பரிந்துரைக்கும் உரங்களை, சரியான அளவில் பயன்படுத்த வேண்டும். விவசாயிகள் மண்பரிசோதனை மூலம் மண்ணின் தன்மை அறிந்து அதற்கேற்ப பயிர் சாகுபடி செய்தால், அதிக மகசூல் பெற முடியும், என்றார். வெள்ளகோவில் வேளாண் துறை துணை அலுவலர் சண்முகம், விவசாயிகளுக்கு அரசு வழங்கும் சலுகைகள், மானியங்கள் குறித்து விளக்கினார்.

**பால் பெருக்க தீவனத்தைசப்ளை செய்ய கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2011,21:46 IST

காங்கயம் : "பால் பெருக்க தீவனத்தை விவசாயிகளுக்கு ஆவின் மூலம் சப்ளை செய்ய வேண்டும்,' என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.காங்கயம் வட்டாரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. பால் சப்ளை செய்யும் விவசாயிகளுக்கு, கொள்முதல் நிலையங்களில் ஆவின் மூலம் பால் பெருக்க தீவனம் வழங்கப்பட்டு வந்தது. இத்தீவனம், மூட்டை ஒன்று ரூ.492க்கு விற்கப்பட்டது. சில மாதங்களுக்கு முன், தீவனம் சப்ளை செய்வதை ஆவின் நிறுத்தியது. அதற்கு பதில், செறிவூட்டப்பட்ட தீவனம் என்ற பெயரில் புதிய தீவனத்தை, மூட்டைக்கு ரூ.966 விலை நிர்ணயித்து விற்பனை செய்தது. சிறப்பு பால் பெருக்க தீவனத்தை மாடுகள் விரும்பி உண்டன; செறிவூட்ட தீவனத்தை உண்பதில்லை. விவசாயிகளும் புதிய தீவனத்தை வாங்குவதில்லை. இதனால், புதிய தீவனம் சப்ளை செய்வதை ஆவின் நிறுத்தியது. விவசாயிகள் கூறுகையில், "சிறப்பு பால் பெருக்க தீவனம் குறைந்த விலையில் இருந்ததாலும், மாடுகள் விரும்பி உண்ணக்கூடியதாக இருந்ததாலும், அதை வாங்கினோம். அத்தீவனத்தை ஆவின் நிறுத்தி விட்டது. மீண்டும் சப்ளை செய்ய ஆவின் முயற்சிக்க வேண்டும்,' என்றனர்.

**மக்காச்சோளம் சாகுபடி செய்ய ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2011,21:41 IST

பல்லடம் : மக்காச்சோளத்துக்கு மார்க்கெட்டில் கடும் கிராக்கி நிலவுவதால், பல்லடம், சுல்தான்பேட்டை வட்டார விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் தீவிரம் காட்டி வருகின்றனர். பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் 4,500 கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. கறிக்கோழிகளுக்கான தீவனம் தயாரிப்பில் மக்காச்சோளத் தின் பங்கு 60 சதவீதம். கோழிகளுக்கு தீவனம் தயாரிக்க மக்காச்சோளம் அதிகம் தேவைப்படுவதால், உள்ளூர் மார்க்கெட்டில் தொடர்ந்து தேவை இருந்து கொண்டே இருக்கிறது. இதன் காரணமாக, பல்லடம், சுல்தான்பேட்டை வட்டார விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். மூன்று மாதத்துக்கு முன், மக்காச்சோளம் கொள்முதல் விலை மூட்டை ஒன்றுக்கு ரூ.950 முதல் 1,000 வரை இருந்தது. இவ்விலை, விவசாயிகளுக்கு ஓரளவுக்கே கட்டுப்படியானதாக இருந்தது. இப்பகுதியில் உள்ள பெரும்பாலான விவசாயிகள், மக்காச்சோளம் சாகுபடியில் பெரிய அளவில் ஆர்வம் காட்டவில்லை. கடந்த இரண்டு மாதமாக கொள்முதல் விலை மூட்டை ஒன்று ரூ.1,250 முதல் 1,300 வரை உள்ளது. இவ்விலை கட்டுப்படியானதாக உள்ளதால், பல்லடம், சுல்தான்பேட்டை வட்டார விவசாயிகள், மானாவாரி பயிரான மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

**ரூ.53.30 லட்சத்துக்கு சூரியகாந்தி வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2011,21:41 IST

வெள்ளகோவில் : வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இவ்வாரம் நடந்த ஏலத்துக்கு, திண்டுக்கல், வேடபட்டி, தேனி, ஊத்துக்குளி பகுதிகளை சேர்ந்த 210 விவசாயிகள், 3,211 மூட்டை சூரியகாந்தி கொண்டு வந்தனர். கிலோவுக்கு முதல் தரம் ரூ.37.59; இரண்டாம் தரம் ரூ.32.09 என சூரியகாந்தி விதைக்கு விலை நிர்ணயிக்கப்பட்டது. காங்கயம், பூனாச்சி, கரூர், ஈரோடு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். ரூ.53.30 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.

**கரும்பு விவசாயிக்கு ரூ. ஒரு லட்சம் இழப்பீடு :பெரம்பலூர் நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவு**

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2011,02:00 IST

அரியலூர்: உரிய காலத்தில் கரும்பு வெட்ட அனுமதிக்காமல் கால தாமதம் ஏற்படுத்திய கோத்தாரி சர்க்கரை ஆலை நிர்வாகம், கரும்பு விவசாயிக்கு ஒரு லட்ச ரூபாய் இழப்பீடு வழங்க பெரம்பலூர் நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அரியலூர் அழகப்பா நகரை சேர்ந்தவர் சாமிநாதன்(65). அரியலூர் அருகே கயர்லாபாத் விவசாயி சாமிநாதனுக்கு சொந்தமாக உள்ள நிலத்தில், கரும்பு பயிரிட்டு வருகிறார். லால்குடி தாலுகா காட்டூரில் உள்ள கோத்தாரி சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயியாக பதிவு செய்து, தனது நிலத்திலிருந்து ஆண்டொன்றுக்கு சராசரியாக 250 டன் கரும்பு வெட்டி அனுப்பினார்.

சாத்தமங்கலத்தில் கோத்தாரி சர்க்கரை ஆலை துவக்கப்பட்டதை தொடர்ந்து சாமிநாதனின் பெயர் பதிவு, சாத்தமங்கலம் கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு மாற்றப்பட்டது. விவசாயி சாமிநாதன் 2009-2010ம் ஆண்டு பதிவு செய்த கரும்பை வெட்டுவதில் பிரச்சனை ஏற்பட்டது. சாத்தமங்கலம் கோத்தாரி ஆலைக்கு போதிய கரும்பு இல்லாததால், 2010 ஜூன் 15ம் தேதி ஆலை மூடப்பட உள்ளதால், தங்களது ஆட்களை வைத்து, அறுவடை காலத்துக்கு முன்பே மூன்றரை ஏக்கர் கரும்பை வெட்ட, ஆலை நிர்வாகம் ஏற்பாடு செய்தது. தொடர்ந்து ஆலை மூடப்பட்டு விட்டதாக கூறி முழு கரும்பையும் வெட்ட விடாமல் நிறுத்திவிட்டனர்.

கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்த கரும்பை முழுமையாக வெட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயி சாமிநாதன் பல முறை நேரடியாக கேட்டும், வக்கீல் மூலம் அறிவிப்பு கொடுத்தும் பலனில்லை. இதனால் பயிரிட்ட முழு கரும்பையும் சர்க்கரை ஆலை வெட்டாமல் காய்ந்ததாலும், அதனால் மறுபடியும் பயிர் செய்ய இயலாமல் போனதாலும் ஏற்பட்ட பயிர் சாகுபடி நட்டம் மற்றும் மன உளச்சலுக்காக, நான்கரை லட்ச ரூபாய் இழப்பீடு கோத்தாரி சர்க்கரை ஆலை நிர்வாகம் வழங்க வேண்டும் என, பெரம்பலூர் நுகர்வோர் நீதிமன்றத்தில், விவசாயி சாமிநாதன் மனு தாக்கல் செய்தார். வழக்கை விசாரித்த நுகர்வோர் குழு, பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயி சாமிநாதனுக்கு இழப்பீடு தொகையாக ஒரு லட்ச ரூபாயும், நீதிமன்ற செலவுக்காக 5 ஆயிரம் ரூபாயும் கோத்தாரி சர்க்கரை ஆலை நிர்வாகம் வழங்க வேண்டும் என உத்தரவிட்டது.

**புதிய தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நெல் – கோதுமை கொள்முதலை ஒரு கோடி டன் உயர்த்த திட்டம்**



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*மத்திய அரசு, தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொண்டு புதிய சட்டம் உருவாக்க தயாராகி வருகிறது. இதன்படி மேலும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு உணவு தானியங்களை வழங்க வேண்டியிருக்கும் என்பதால் நெல், கோதுமை கொள்முதலை ஒரு கோடி டன் அதிகரிக்க மத்திய வேளாண் அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.*
*வரைவு மசோதா*
*வேளாண் அமைச்சகம் வரைவு தேசிய உணவு பாதுகாப்பு மசோதாவை இறுதி செய்துள்ளது. இதன் வாயிலாக மானிய விலையில் உணவு தானியங்களை சட்டப்படி பெறும் உரிமையை 68 சதவீத மக்கள் பெறுவதற்கு வகை செய்யப்படும். தற்போது நாட்டின் மக்கள்தொகை 120 கோடியாக உள்ளது.*
*புதிய மசோதாவின்படி, பயனாளிகளுக்கு உணவு தானியங்களை வழங்கத் தவறும் பட்சத்தில் மாநில அரசுகள் 'உணவு பாதுகாப்பு படி' எனும் உதவித் தொகையை அவர்களுக்கு ரொக்கமாக வழங்க வேண்டும். பயனாளிகளின் குறைகள் மற்றும் புகார்களை கேட்டு அவற்றை களைய மத்திய மற்றும் மாநில அளவுகளில் உணவு பாதுகாப்பு ஆணையம் எனும் ஆலோசனை குழுவையும் அமைக்க புதிய மசோதா வகை செய்துள்ளது.*
*7 கோடி டன்னாக...*
*இது குறித்து வேளாண் அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, "மத்திய அரசு தற்போது 6 கோடி டன் நெல் மற்றும் கோதுமையை கொள்முதல் செய்து வருகிறது. இது, நாட்டில் இந்த இரண்டு தானியங்களின் மொத்த உற்பத்தியில் 30*

சதவீதமாகும். தற்போது கொண்டு வர உள்ள உணவு பாதுகாப்பு மசோதாவின்படி உணவு தானியங்களுக்கான தேவைப்பாடு கணிசமாக உயரும் என்பதால் நெல், கோதுமை கொள்முதலை 7 கோடி டன்னாக அதிகரிக்க வேண்டியிருக்கும்" என்று தெரிவித்தார்.

உணவு தானியங்கள் கொள்முதல் அதிகரிக்கும் போது மத்திய அரசின் உணவு மானிய சுமையும் அதிகரிக்கும். தற்போது அரசின் உணவு மானிய செலவினம் ரூ.80,000 கோடி என்ற அளவில் உள்ளது. கொள்முதல் அதிகரிக்கும் போது இந்த செலவினம் ரூ.1 லட்சம் கோடியாக உயர்ந்து விடும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறைந்தபட்ச ஆதரவு விலை

உணவு தானியங்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை நன்கு அதிகரித்தால் அரசின் கொள்முதலும் சிறப்பான அளவில் அதிகரிக்கும். இதனைக் கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டு கரீஃப் பருவத்திற்கு நெல்லுக்கான கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.80 உயர்த்தப்பட்டுள்ளது. நெல் சாகுபடியை பொறுத்தவரை உரம், விரை உள்ளிட்ட இடுபொருள்களுக்கான செலவினம் 70 சதவீதம் உயர்ந்துள்ளது. கொள்முதல் விலை நன்கு உயர்த்தப்பட்டுள்ளதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இதனால் நெல் சாகுபடி பரப்பளவு அதிகரித்து உற்பத்தியும் பெருகும்.

பருப்பு வகைகளுக்கான விலை குவிண்டாலுக்கு ரூ.200 முதல் ரூ.400 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. துவரம் பருப்பு மற்றும் பச்சைப் பயறுக்கு விலை குவிண்டாலுக்கு ரூ.100 உயர்த்தப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் துவரை, உளுந்து மற்றும் பச்சைப் பயறுக்கு அறுவடை காலத்தில் குவிண்டாலுக்கு ரூ.500 ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டிலும் இதே அளவு ஊக்கத் தொகை அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முக்கிய உணவு தானியங்களுக்கான போனஸ் தொகை குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நெல் கொள்முதல்

நெல் கொள்முதல் பருவம் அக்டோபர் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் நிறைடைகிறது. கோதுமை கொள்முதல் பருவம் ஏப்ரல் மாதம் தொடங்கி மார்ச் மாதம் நிறைவடைகிறது. 2010–11–ஆம் ஆண்டு கரீஃப் மற்றும் ரபி பருங்களின் உற்பத்தியிலிருந்து ஜூன் 10–ந் தேதி வரையிலான காலத்தில் நெல் மற்றும் கோதுமை 5.70 கோடி டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இரண்டு தானியங்களின் கொள்முதலும் தொடர்ந்து மும்முரமாக நடைபெற்று வருகிறது.